DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W.12**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஹரீஸ்பிரபு | Caste | |
| Father's Name | : | Calling | மருத்துவர் |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 09.04.2025

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1வது எதிரி மோனேஷ் கடந்த 16.10.2021 ஆம் தேதி இரவு 8.15 மணியளவில் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். அவரை பரிசோதித்த போது அவருக்கு நான்கு காயங்கள் இருந்தன. அவரை விசாரித்த போது தன்னை சிக்கனாபுரம் தண்ணீர் பந்தல் என்ற இடத்தில் அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டார். அவர் சிகிச்சைக்கு சேர்ந்த குறிப்பாணையை உடனடியாக தாராபுரம் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்து விட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கை என்றால் சரிதான் **விபத்துபதிவேட்டு அறிக்கையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1.**

**2.** அன்றைய தினம் அதே நேரத்தில்அதே சம்பவத்தில் காயம் பட்ட மேற்படி 1–வது எதிரியின் தகப்பனார் துரையன் என்பவர் அன்றைய தினம் இரவு 8.10 மணிக்குமேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஆஜரானார். விபத்து பதிவேட்டு அறிக்கையில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி **விபத்து பதிவேட்டு அறிக்கையின் சான்றிட்ட நகல்**

**எ.ம.சா.ஆ.2.** குமரேசன் என்பவர் அன்றைய தினம் 7.50 மணிக்கு மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்க வழங்கப்பட்ட **விபத்து பதிவேட்டு அறிக்கை புகைப்பட நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அது எ.ம.சா.ஆ.3** (அது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது). முருகேஷ் என்பவர் 6.50 மணிக்கு சிகிச்சைக்காக மேற்படி மருத்துவமனையில் ஆஜராகி உள்ளார் அவருக்கு வழங்கப்பட்ட **விபத்து பதிவேட்டு அறிக்கையில் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 4.** மேற்படி நான்கு விபத்து பதிவேட்டு அறிக்கை குறித்தும் போலீசாரிடம் தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான்.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை நீதிமன்ற அனுமதியின் பேரில்</u>**

இறந்துபோன சுப்பிரமணி என்பவர் மாலை 6.00 மணிக்கு சிகிச்சைக்காக மருத்துவமனை கொண்டு வரப்பட்டார். பொதுவாக மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டால் கண்பாவை விரிந்த நிலையில் காணப்படுவதற்கு வாய்ப்புண்டு. (மேற்படி கேள்வியை பொறுத்து எதிரி தரப்பில் ஆட்சேனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனை வழக்கு முடிவின் போது பரிசீலிக்கப்படும்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை நீதிமன்றம அனுமதியின் பேரில்</u>**

இந்த வழக்கில்மேற்படி கண்பாவை விரிந்த நிலையில் காணப்படுவதற்கு காரணம் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் நான் பார்த்தபோது கண்பாவை விரிந்த நிலையில் இருந்தது ஆனால் என்ன காயம் என்று குறிப்பாக சொல்லமுடியாது.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.04.09 19:42:09 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.